**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 164 of 2024

Depositions of PW -2 witness for ________ Prosecution / Defence / Court

Name : சத்யா

Father's Name : த/பெ. கோவிந்தராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of September** 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் கோயமுத்தூர் ஒண்டிப்புதூர், காமாட்சிபுரம், அம்பேத்கர் நகரில் குடியிருந்து கொண்டு ராஜஸ்தானை சேர்ந்த பிரதிப் ராஜா சவுகான் என்பவரின் லக்கி மார்பிள்ஸ் கடையில் கடந்த ஒரு வருடமாக பில்லிங் போடும் வேலை செய்து வருகிறேன். மாதவ்லால் என்பவரை எனக்கு தெரியும். அவர் என்னுடன் பணி புரிந்து வந்தார். கடந்த 14.01.2024 ம் தேதி என்று எங்களது முதலாளி அவரது சொந்த ஊரான ராஜஸ்தானுக்கு சென்றார். அப்பொழுது கம்பெனி நிர்வாகத்தை மாதவ்லால் என்பவர் கவனித்து வந்தார். எங்களது முதலாளி 19.01.2024 ஆம் தேதி சொந்த ஊரிலிருந்து திரும்பும் கடைக்கு வந்தார். காலை 10 மணியளவில் மாதவ்லால் கடந்த ஐந்து நாட்களில் 5 லட்சத்து 66 ஆயிரத்து 200 பணம் வியாபாரம் ஆனது என சொல்லி மேற்படி பணத்தை முதலாளிடம் கொடுத்தார். முதலாளியும் மேற்படி பணத்தை சரி பார்த்துவிட்டு டினாமினேஷன் போட்டு கொடுத்து வங்கியில் செலுத்துமாறு கூறிச் சென்றார்.

2. ஆனால் மதியம் 2 மணி வரை மாதவிலால் கடைக்கு திரும்ப வில்லை. ஆகவே மேற்படி விபரத்தை எங்களது முதலாளிக்கு தகவல் சொன்னோம். அவரும் கடைக்கு வந்து விட்டார். எங்கள் முதலாளி பல இடங்களில் விசாரித்தும் அவர் எங்கு சென்றார் என்ற விபரம் தெரியவில்லை. பின்னர் அவரது சொந்த ஊருக்கும் போன் செய்து அவர் எங்கு உள்ளார் என்பது குறித்து விசாரித்தார். அப்பொழுதும் தகவல் தெரியாததால் எங்கள் முதலாளி 06.02.2024 ஆம் தேதி சூலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.29 20:58:13 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**